தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2035 நவம்பர் 2004

18 DEC 2004

## காசியா அசீனா நயினார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

காசியா அசீனா நயினார் அறக்கட்டளைச் சொற்பொழிவு இலக்கியத்துறையின் சார்பில் 30.11.2004 பிற்பகல் 3.00 மணிக்கு மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமைதுணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுத் தலைமையுரை வழங்கினார். துணைவேந்தர் அவர்கள் தம் தலைமையுரையில் பண்பாடு என்பதன் விளக்கங்கள், ஆங்கிலத்தில் culture என்பதற்கு மாத்யூ ஆர்னால்டு தரும் விளக்கம், எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் விளக்கம் ஆகியவற்றை விளக்கிக் கூறினார். பண்பாடு என்ற சொல்லாட்சியை முதன்முதலில் 1937ஆம் ஆண்டில் டி.கே.சிதம்பரநாத முதலியார் பயன்பாட்டில் கொண்டு வந்துள்ளமையைச் சுட்டிக்காட்டினார். பண்பாடு என்பது வேளாண் கலைச்சொல் என்றார். பின்னர், இலக்கியங்களில் எவ்வாறு பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுத்தப் பெறுகின்றன என்பதைச் சான்றுகளுடன் விளக்கினார்.




அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் திரு.கமால்பாட்சா அவர்கள் தமிழ் இலக்கிய உலகிற்கு இசுலாமியப் புலவர்களின் பங்களிப்பு, இசுலாமியக் கொள்கைகளில் காணப்படும் சமத்துவ உணர்வு, இசுலாமிய இலக்கியங்கள் புலப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகள், தமிழ்ப் பண்பாட்டை வெளிநாட்டவர்க்கு இசுலாமிய இலக்கியங்கள் உணர்த்தும் பாங்கு, தமிழ் இலக்கிய உலகிற்கு இசுலாமியப் புலவர்கள் அளித்துள்ள புதிய இலக்கிய வகைகள் ஆகியவற்றை விளக்கினார்.

இலக்கியத்துறைத்தலைவர் முனைவர் தா.ஈசுவரபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வ.குருநாதன் நன்றியுரை வழங்கினார். முனைவர் க.திலகவதி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

- முனைவர் தா.ஈசுவரபிள்ளை, இலக்கியத்துறை

---

## உலக தத்துவ தினம் கருத்தரங்கம்

இந்திய தத்துவ ஆய்வுக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவ மையம் சார்பில் 18.11.2004 அன்று உலக தத்துவ தினத்தையொட்டிக் கருத்தரங்கு நடைபெற்றது. சமயங்கள் தத்துவத்தை விட்டு விலகிச் செல்வதால், சுய அடையாளத்தை இழக்கின்றன என கோயம்புத்தூர் ஸ்ரீவித்யா தியான பீட நிர்வாகி ஜகந்நாதசுவாமி கூறினார்.

நமது சிந்தனை முறை, நாட்டு விடுதலைக்கு முன்பும். பின்பும் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி முறையால் ஏற்பட்டதாகும். தத்துவம் என்பதை அறிவுத்தேடலுக்கான ஆர்வம் என வரையறுக்கலாம். இந்திய தத்துவஞானம் தன்னைத்தான் உணர்ந்து கொள்ளுதலை வற்புறுத்தும். உள்முகத் தேடல் என்பதே இதன் மையம். சமயம் தன் நிலையிலிருந்து பிறழ்வது ஏன்? சமயம் ஏன் கேலிக்குரியதாக பார்க்கப்படுகிறது? அறநெறிகளைப் பின்பற்றச் சமயம் அவசியமில்லை. ஆனால் அறமில்லாமல் சமயம் இருக்க முடியாது. ஒழுங்குபடுத்தப்பட்ட சிந்தனை முறையே அறிவியலுடன் கைகோர்த்துச் செல்ல முடியும். இதற்கு தத்துவத்தின் தர்க்கவியல் (logics) துணை நிற்கிறது. தர்க்கவியல், அறவியல், அறிவியல் ஆகியவை மட்டுமேதத்துவமாகி விடுவதில்லை. புலன்களால் கண்டறிய முடியாதவை. புலன்களால் எட்ட முடியாதவை (metaphysics) குறித்தும் தத்துவம் பேசுகிறது. தத்துவம் பயில்வோர் பன்முகத்தன்மைகொண்ட பார்வையைப் பெற்றிருக்க வேண்டும். இதற்காக அனைத்துத் தத்துவங்களையும் பயில வேண்டும். இறுதியான உண்மைஎன்பதே கிடையாது. பன்முக அனுபவங்கள், சிந்தனைகளை நமக்குள் அனுமதிக்க வேண்டும். உண்மையைத் தேடல், அறிவுத் தேடல், விழிப்புணர்வு, போன்றவையே தத்துவத்தின் அடிப்படை. நம்முடைய தத்துவத்துக்கு முரண்பட்ட தத்துவங்களை ஏற்றுக் கொண்டவர்களுடன் நேசமுடன் இருப்பதன் மூலம் உலக ஒற்றுமை, உலக அமைதிக்கு வழிவகுக்க முடியும். நுகர்வியப் பண்பாடு நமது பண்பாட்டை அழித்து வருகிறது. இன்ப நுகர்வே இன்று முன்னிலைப்படுத்தப்படுகிறது. இது விட்டில் பூச்சிப் பண்பாடு. இது நமது பண்பாட்டை உள்ளீடற்றதாக ஆக்குகிறது. விளம்பரங்களில் சமயத்துறவிகள், பெண்கள் கேலிக்குள்ளாக்கப் படுகின்றனர். இச்சூழலில் தத்துவம் ஒன்றே நம்மைமீட்க முடியும். தத்துவம், அறிவியல், பண்பாடு ஆகியவை கைகோர்த்து இருந்தால், தத்துவத்தை மூட நம்பிக்கையிலிருந்து அறிவியல் காக்கும். போர்கள் இல்லாத அமைதிப் பண்பாட்டை உருவாக்கத் தத்துவம் உதவும் என்றார் ஜகந்நாதசுவாமி.

விழாவில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ப.மு.ஜமாஉறிர், அமெரிக்க பென்சில்வேனியா பல்கலைக்கழக ஆய்வாளர் மைக்கேல் சி.லிண்டர்மேன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தத்துவ மைய இயக்குநர் க.பாஸ்கரன் வரவேற்றார்.

–முனைவர் க.பாஸ்கரன், தத்துவமையம்

## இராஜயோகம் - சிறப்புச் சொற்பொழிவு

முனைவர் ஸ்டெல்லா கேம்பெரி (அமெரிக்கா), மற்றும் கரோலின் வார்ட் (ஆஸ்திரேலியா) ஆகியோர் 08.11.2004 அன்று புலவிருந்தகக் கருத்தரங்க அறையில் பிரம்மகுமாரிகள் இயக்கத்தின் சார்பாக இராஜயோகம் என்பது பற்றி மாணவர்களுக்குச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

## தமிழில் துணை வினைகள்

அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் மொழியியல் துறையின் சார்பில் 22,23.11.2004 ஆகிய நாள்களில் நிகழ்ந்தன. பேராசிரியர் அ.தாமோதரன் (ஜெர்மனி, ஹைடல்பார்க் பல்கலைக்கழகம்) அவர்கள் தமிழில் துணை வினைகள் என்னும் தலைப்பில் உரையாற்றினார். துணைவினை என்னும் சொல்லின் பொருள், வளர்ச்சி ஆகியன குறித்து விரிவாக விளக்கினார். பேராசிரியர் கி.அரங்கன் தலைமைதாங்கினார். மொழியியல்துறை தலைவர் ச.இராசேந்திரன் வரவேற்புரையும், முனைவர் எம்.சுசீலா நன்றியுரையும் வழங்கினர்

–மொழியியல்துறை




## மொழிப்புலப் பூங்கா

தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலத்தில் அமைக்கப்பெற்றுள்ள மொழிப்புலப் பூங்காவினைத் தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலரும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினருமான திரு பு.ஏ.இராமையா இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்தார். பூங்கா 04.11.2004 முதல் மாணவ மாணவியரின் பயன்பாட்டிற்காகக் கொண்டு வரப்பெற்றது. தமிழக அரசின் வழிகாட்டுதலின்பேரில் தொடங்கப் பெற்ற முதுகலை வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் இம்மொழிப்புலப் பூங்கா அமைந்துள்ளது. ஆட்சிக்குழு உறுப்பினர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மாணவ மாணவியரும், துணைவேந்தர், பதிவாளர் மற்றும் அலுவலகத்தினரும் திரளாகக் கலந்து கொண்டனர். திறப்பு விழா நினைவாக மொழிப்புலப் பூங்காவில் ஆட்சிக்குழு உறுப்பினர்களால் பூங்கன்றுகள் நடப்பெற்றன.






## இன்றைய சமுதாயத்தில் பயன்பாட்டு மொழியியலின் செயற்பரப்பு

- புத்தொளிப்பயிற்சி

தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையில் 27.10.2004 அன்று தொடங்கி 16.11.2004 முடிய 21 நாட்கள் பல்கலைக்கழக மானியக்குழு நல்கையில் 'இன்றைய சமுதாயத்தில் பயன்பாட்டு மொழியியலின் செயற்பரப்பு' என்ற தலைப்பில் புத்தொளிப் பயிற்சி நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 37 கல்லூரி ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற இந்தப் புத்தொளிப் பயிற்சியின் தொடக்க விழாவைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துஜணவேந்தர் பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் 'சமூகம்/ மொழி, மொழியியல்' என்ற தலைப்பில் மையக் கருத்துரை வழங்கினார். கேரளா, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனப் பேராசிரியர்களும், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பயிற்சி வகுப்புகளை நடத்தினர். மொழியியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர் எம்.சுசீலா அவர்கள் புத்தொளிப் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

- எம். சுசீலா, மொழியியல் துறை



# தென்னிந்திய வரலாற்றின் தொடக்க நிலை



அண்மைக்காலத் தமிழ் பிராமி – கல்வெட்டுக்கள் மற்றும் தொல்லியல் கண்டுபிடிப்புகள் அடிப்படையில் தென்னிந்திய வரலாற்றின் தொடக்க நிலை என்ற தலைப்பிலான கருத்தரங்கு 2004 செப்டம்பர்த் திங்கள் 24,25 ஆகிய இரு நாட்கள் கல்வெட்டியல் துறையின் சார்பாகத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தங்க அறையில் இந்திய வரலாற்று ஆய்வுக்கழக நல்கை உதவியுடன் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும் கல்வெட்டியல் துறையின் முன்னாள் தலைவருமான முனைவர் செ.இராசு அவர்கள் வரவேற்புரை நல்க, பேராசிரியர் எ.சுப்பராயலு அவர்கள் தலைமையுரை ஆற்றினார். தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் சிறப்பு ஆணையர் திரு தி.ஸ்ரீ.ஸ்ரீதர் இ.ஆ.ப. அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார். Early Tamil Epigraphs from the Earliest Time to 6th Century A.D என்ற நூலின் ஆசிரியரும் மிகச்சிறந்த கல்வெட்டியல் ஆய்வாளருமான திரு ஐராவதம் மகாதேவன் இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் கருத்தரங்கச் சிறப்புரை ஆற்றினார்.



## கருத்தரங்கு

இவ்வுரையில் தமிழக வரலாறு இலக்கியம், கல்வெட்டியல், தொல்லியல், நாணயவியல், மொழியியல் மற்றும் வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் மீளுருவாக்கம் செய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் முதன்மைச் சான்றுகள் பாதுக்காக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டுத் தமிழ் பிராமியின் தோற்றம் வளர்ச்சி மற்றும் அதன் பன்முகக் கூறுகளை எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னைப் பல்கலைக்கழகம், போன்ற நிறுவனங்களிலிருந்து இலக்கியம், கல்வெட்டியல், தொல்லியல், நாணயவியல், மொழியியல் மற்றும் வரலாறு சார்ந்த அறிஞர்கள் கலந்து கொண்டனர். அக்கருத்தரங்கம் 6 அமர்வுகளில் தமிழ் பிராமி கல்வெட்டின் பல்வேறு கூறுகளை விவாதித்தது. இக்கருத்தரங்க அமர்வுத் தலைவர்களாக முனைவர் ப.சண்முகம், முனைவர் நடனகாசிநாதன், முனைவர் செ.இராசு, முனைவர் இரா.கோதண்டராமன், முனைவர் இரா.கலைக்கோவன், முனைவர் எ.சுப்பராயலு ஆகியோர் செயல்பட்டனர். இக்கருத்தரங்கில் ஆய்வாளர்களும் மாணவர்களும் கலந்துரையாடலில் பங்கேற்று சிறப்புச் செய்தனர்

– கல்வெட்டியல் துறை

## நவம்பர் 04'இல்

| | | |
|---|---|---|
| 04.11.2004 | – | மொழிப்புலப் பூங்கா – திறப்புவிழா |
| 04.11.2004 | – | ஆட்சிக்குழுக்கூட்டம் |
| 08.11.2004 | – | தத்துவ மையம் – பிரம்மகுமாரிகள் இயக்கம் – அமெரிக்க, ஆஸ்திரேலியா அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவு |
| 09.11.2004 | – | அரிய கையெழுத்துச்சுவடித்துறை – பார்வையிடல் |
| 10.11.2004 | – | நூலகத்துறை – பார்வையிடல் |
| 16.11.2004 | – | மொழியியல்துறை – புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா |
| 16.11.2004 | – | கட்டடக்கலைத்துறை – புத்தொளிப்பயிற்சி – தொடக்க விழா |
| 18.11.2004 | – | தத்துவமையம் – ICPR நிதிநல்கை – தத்துவ தினக் கருத்தரங்கு |
| 22,23.11.2004 | – | மொழியியல்துறை – அன்னை அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளைச் சொற்பொழிவு |
| 30.11.2004 | – | இலக்கியத்துறை – காசியா அசீனா நயினார் அறக்கட்டளைச் சொற்பொழிவு |

## நடைபெற்ற நிகழ்வுகள்

## வாழ்க்கை வழிகாட்டுதல் - பயிற்சி உரை

தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக 'வாழ்க்கை வழிகாட்டுதல் – பயிற்சி உரை' தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் 29.10.2004 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமையேற்ற தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் கு.அண்ணாதுரை அவர்கள் பேசும்போது வாழ்க்கையில் நிகழும் சிக்கல்களுக்கு ஏற்பவும் பயன்பாட்டு அடிப்படையிலும் வாழ்க்கைக்கான கல்வி ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார்.

'வாழ்க்கை வழிகாட்டுதல்' என்ற தலைப்பில் பயிற்சி உரை நிகழ்த்திய "முருகா அய்.ஏ.எஸ்.அகாடமி" முதல்வர் பேரா.விஸ்வலிங்கம் பேசியதாவது, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமைப்பணித் தேர்வு மற்றும் இந்தியக் காவல்பணி தேர்வு பற்றிய விளக்கங்களையும், பல்கலைக்கழக மானியக் குழுவினரால் நடத்தப்பெறும் தேர்வுகள் பற்றிய செய்திகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தார். மேலும் மாணவர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தெளிவான பதிலளித்தார்.

இந்நிகழ்வின் தொடக்கமாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ.சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியும், விருந்தினரைச் சிறப்புச் செய்தும், திட்ட செயல்பாடுகள் குறித்த அறிக்கையையும் வாசித்தார். விழாவின் இறுதியாக நாட்டு நலப்பணித் திட்ட மாணவி நா.லதா நன்றி கூறினார். திட்ட மாணவர் கு.கோபாலகிருஷ்ணன் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இ.அ.ப. மட்டும்

நூலஞ்சல்

# சைவசித்தாந்தமும் இன்றைய சமுதாயமும்

தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவ மையம் சார்பில் 'சைவசித்தாந்தமும் இன்றைய சமுதாயமும்' என்ற கருத்தரங்கு 26.10.2004 அன்று நடைபெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ச.ப.தியாகராசன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அவர் தம் உரையில் மாணவர்களிடையே மனித நேயம், அன்பு நெறியை வளர்க்கும் கல்விமுறை தேவை, பாடத்திட்டத்தில் சமய இலக்கியங்களைச் சேர்க்கவேண்டும் என வலியுறுத்தினார். வளமாக வாழ்ந்து இன்ப வேட்டையாடும் சமுதாயம்தான் வளர்ச்சியடைந்த சமுதாயம் என்று கூறப்படுகிறது. இச் சூழ்நிலையில் தனிமனித வீழ்ச்சி, சமுதாய வீழ்ச்சி நடைபெறாமல் இருக்கச் சமயங்கள் தோன்றின. சமயப் பெரியோர்கள் வாழ்க்கைக்கு உகந்தவை எவை என்பது குறித்துப் பதிகங்கள், பாடல்களை இயற்றினர்.




மனிதனுக்கு 'தான்', 'தனது' என்ற அகந்தை இல்லாத மனப்பான்மையை உருவாக்கி இறைவனிடம் இணைப்பது தான் சமயங்கள். சைவம், வைணவம், சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறித்தவம் உள்ளிட்ட அனைத்துச் சமயங்களின் நோக்கமும் இதுதான். சைவ சித்தாந்தம் உலக சகோதரத்துவம். அன்பு நிறைந்த வாழ்க்கை நெறி ஆகியவற்றை வலியுறுத்துகிறது. ஒன்றே தெய்வம் என்பதை மிக ஆணித் தரமாகக் கூறியது சைவம். கி.பி.7ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் தொடங்கி 12ஆம் நூற்றாண்டில் பெரியபுராணம் எழுதிய சேக்கிழார் வரை கதைகள், பாடல்கள் வழியே அறநெறிகளைப் பரப்பினர். 7ஆம் நூற்றாண்டு வாக்கில் பல்லவர், சோழ அரசுகள் வீழ்ச்சியடைந்திருந்தன. அரசு வழிகாட்டல் இல்லாததால் மக்களை நெறிப்படுத்தும் விதத்தில் இலக்கியப் பதிகங்களைப் பாடினர். நாம் காணும் போர்கள், போராட்டங்கள், கொடூரமான நிகழ்வுகளுக்கு மூல காரணம் தான் என்ற எண்ணம். இதைவிட்டு விடும்போது, இறைவனை உணர்ந்து கொள்கிறோம் நாம். 'தான்' என்ற எண்ணத்தை நீக்கி நாம் வாழ முற்படும்போது நம் வாழ்க்கையில் மட்டுமன்றி நாட்டிலும் அமைதி நிலவும். 'குழந்தைகளிடம் நல்ல நெறிகளை உருவாக்குவது பெற்றோர் பொறுப்பு, கல்வி நிறுவனங்களின் பொறுப்பு இல்லை' என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. இதைமாற்றிக் கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடையே மனித நேயத்தை, அன்பு நெறியை உருவாக்கவேண்டும் என்றார். தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.பி.சித்தலிங்கையா பேசியது: அறிவியல், தகவல் தொடர்பு முன்னேற்றத்தால், உலகம் சுருங்கி வருகிறது. இதனால் மொழி. பண்பாடு, நாகரிகம், மனித நேயத்தில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சமுதாயப் பிரச்சினைகளுக்குச் சைவசித்தாந்தம் தீர்வு காண முடியுமா என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். சைவ சித்தாந்தத்தில் பிற சமய தத்துவங்களைக் காண முடியும். பதிகங்களில் 'தான்' என்ற சொல் இறைவனைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டது. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துபவன்தான் தன்னை நேசிப்பவனாவான். தனி மனித உயர்வு, சமுதாய நலனுக்காக இருக்கவேண்டும் என்றார் சித்தலிங்கையா. விழாவுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி தலைமைவகித்தார். தத்துவ மையத் தலைவர் க.பாஸ்கரன் வரவேற்றார்.



– முனைவர் க.பாஸ்கரன், தத்துவ மையம்

## நவம்பர் 2004 இல்... முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

| ஆய்வாளர் பெயர்/துறை | தலைப்பு | வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள் |
|---|---|---|
| 1. உ.அறிவுச்சுடர் தொல்லறிவியல் துறை | A Comparative Study on nutritional Biochemistry in Snails of Different Habitats of Tamil Nadu, India | 03.11.2004 |
| 2. தி.சிவக்குமார் பு.மொ.ப.ஆ.நி., பாண்டிச்சேரி | விளம்பரங்களில் விளித்தல் செயல்பாடும் தன்னிலைக் கட்டமைப்பும் | 26.11.2004 |

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு